**கவனிக்க.**-2018.02.02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி (IV அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2058 - 2018 පෙබරවාරි මස 09 වැනි සිකුරාදා - 2018.02.09

*2058 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III – காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்ட அறிவித்தல்கள் | - |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 26 |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- கொழும்பு பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையை பரஸ்பரமற்ற மயமாக்கல் சட்டமூலம் 2018, சனவரி மாதம் 26 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2018, மாச்சு மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, பெப்புருவரி மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/40405.
மாகாணக்காணி ஆணையாளரின்
இல.: சிபிசி/எல்பி/எல்டி/4/1/36/195.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

நுவரெலியா மாவட்டம், அம்பகமுவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 320 F, வட்டவல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த வட்டவல எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் அம்பகோ/ பிராளே/ 2013/ 2 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் B எனக் காட்டப்பட்டுள்ள 2 ஏக்கர் 2 றூட் 9 பேர்ச்சஸ் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற் காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு ஜே. எஸ். வட்டவல (வ-து) தனியார் நிறுவனம் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப் படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின் வருமாறு :-

வடக்கு : பாதை மற்றும் காணித்துண்டு ஏ;
கிழக்கு : காணித்துண்டு ஏ, வரைபட இலக்கம் 8097 இன் காணித்துண்டு இலக்கம் 06 மற்றும் வரைபட இலக்கம் 6930 இன் காணித்துண்டு இலக்கம் 02;
தெற்கு : வரைபட இலக்கம் 6930 இன் காணித்துண்டு இலக்கம் 02;
மேற்கு : வரைபட இலக்கம் 6930 இன் காணித்துண்டு இலக்கம் 02 மற்றும் பாதை.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (22.12.2017 ஆந் திகதியிலிருந்து முன்னோக்கி 30 வருடங்கள்) ;

**வருடாந்தக் குத்தகை.**- 2017 ஆம் ஆண்டு காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ரூபா ஐம்பது இலட்சத்தை விட (ரூபா 50,00,000) குறையும் சந்தர்ப்பங்களில் பிரதான விலை மதிப்பீட்டாளரின் விலைமதிப்பு அடிப்படையில் அவ்வருடத்துக்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். குத்தகை அமுல்படுத்தும் வருடத்தின் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா ஐம்பது இலட்சத்தைவிட (ரூபா 50,00,000) தாண்டும் சந்தர்ப்பத்தில் பிரதான மதிப்பீட்டாளரின் விலைமதிப்பு அடிப்படையில் அவ் வருடத்திற்கான காணியின் சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இக்குத்தகைப் பணமானது எல்லா ஐந்து வருடங்களுக்கும் ஒரு முறை திருத்தப்பட வேண்டும் என்பதுடன் அதன் முந்தைய ஐந்து வருடத்தின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகைப் பணத்திற்கு 20% சேர்க்கப்பட வேண்டும்;

தவணைப்பணம்.- தவணைப்பணம் அறவிடப்பட மாட்டாது;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறேந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படலகூடாது;

(ஈ) பிரதேச செயலாளர், இலங்கை முதலீட்டுச்சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக் காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2017.12.22 ஆந் திகதியிலிருந்து 05 வருடகாலப்பகுதி பூர்த்தியாகும் வரையிலும், இந்தக் காணி குத்தகைக்குப் பெற்றுள்ள நோக்கத்தை நிறைவுசெய்வதற்கான கீழ்க் குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் அனுமதிக்கப் படமாட்டாது;

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ்வறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

வை. வை. என். பெரேரா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகெத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2018, பெப்புருவரி 09.

02-228

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.:- 4/10/48394.
மாகாணக்காணி ஆணையாளரின்
இல.:- ஒகொ/ஓ/19/தீ.ப./மாதர/222.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மாத்தறை மாவட்டம், மாத்தறை நகரம் 4 பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட எலிய கந்த தெற்கு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மெந்தவத்த எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் MR/ MTR/ 2014/ 118 ஆம் இலக்க சுவடு வரைபடத்தில் காணித்துண்டு இல. A, B எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் -ஏக்கர் - றூட் - பேர்ச் 0.1374 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்குத் தருமாறு கேட்டு கொழும்பு 01, லோட்டஸ் வீதி, த. பெ. இல. 503 இல் உள்ள ஸ்ரீ லங்கா டெலிகொம் பி. எல். சி. விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின் வருமாறு :-

காணித்துண்டு இலக்கம் A
வடக்கு : பாதை ;
கிழக்கு : வல்கமகே வத்த அல்லது புஞ்சிராலாகே வத்த அல்லது ஹீன்கம மதாதுகே வத்த, கெவத்த, ஆனந்த இந்திரசிறி விஜேசேகர ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் B ;
மேற்கு : முபி 13300/3.

காணித்துண்டு இலக்கம் B
வடக்கு : காணித்துண்டு இலக்கம் A மற்றும் முபி 13300/3 ;
கிழக்கு : வல்கமகே வத்த அல்லது புஞ்சிராலாகே வத்த அல்லது ஹீன்கம மதாதுகே வத்த, கெவத்த, என். டபிள்யு. ஈ. விஜேவத்த ;
தெற்கு : முபி 13300/3;
மேற்கு : முபி மார 1783/4, முபி மார 1783/5, முபி மார 1783/3.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியை குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2017.02.22 தொடக்கம் முன்னோக்கி 30 வருடங்கள்);

**வருடாந்தக் குத்தகை**.- பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட கௌரவ அமைச்சரினால் அனுமதிக்கப்பட்ட 2017 ஆம் வருடத்திற்கான சந்தைப் பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும். ஆயினும் திருத்தியமைக்கப் பட்ட குத்தகைப் பணம் முடிந்த ஐந்து வருடங்களின் இறுதியில் கொடுபட்ட தொகையிலும் பார்க்க 50 வீதத்திற்கு அதிகமாகாமல் இருத்தல் வேண்டும்

தவணைப்பணம்.- வருட குத்தகைப் பணத்தின் மூன்று மடங்கு;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒருவருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும் ;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக் காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்திசெய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2017.02.22 ஆந் தினத்திலிருந்து குறைந்தது 05 வருடங்கள் நிறைவு பெறும் வரையினும் இக்காணி கைமாற்றம் செய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை வர்த்தமானியில் இவ் அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

ஏ. கே. என். செவ்வந்தி அமரசேகர,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகெத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2018, பெப்புருவரி 09.

02-359